<u>**O.S.No.400/2019**</u>

<u>**PW5 :**</u> லோகநாதன் தேதி 26.3.2026

<u>வாசா 5 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, முதன்மை விசாரணை தொடர்ச்சி</u>

என்னிடம் காட்டப்படும் வாசாஆ 1 அடமான பத்திரத்தை நான் தான் தயாரித்தேன். அதில் உள்ள கையெழுத்து மற்றும் முகவரி என்னுடையது தான்.

<u>2 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1999 ல் இருந்து நான் பத்திர எழுத்தராக பணிபுரிகிறேன். மூல ஆவணம் மற்றும் வில்லங்கம் பார்த்து தான் ஆவணங்களை தயாரிப்பேன். வாசாஆ 1 தயாரிக்கும் போது என்னிடம் மூல ஆவணமோ வில்லங்க சான்றிதழோ கொடுக்கவில்லை என்றால் சரியல்ல மூல ஆவணத்தை பார்த்து தான் தயாரித்தேன். வில்லங்க சான்றிதழ் நான் எடுக்க வில்லை. அடமான தேதியில் பண பரிமாற்றம் நடைபெற்றதா என்றால் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் என் முன்பாக பண பரிமாற்றம் நடந்ததாக சொல்லவில்லை. பத்திரம் தயார் செய்து கொடுத்தது மட்டும் தான் தெரியும்.அடமான கடன் பத்திரத்தில் உள்ள விவரங்கள் என்னால் சொல்ல இயலாது. தரப்பினர்கள் சொன்ன முகவரியை தான் எழுதினேன். அசல் ஆவணம் ஏற்கனவே வேறுஅடமானத்தில் இருந்தது என்றும் வாசாஆ 1 எழுதும் போது என்னிடம் காட்டப்படவில்லை என்றும் தற்போது வழக்கிற்காக வாசாஆ 1 ற்கான ஆவணத்தை நான் பார்வையிட்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரவில்லை. வாதிகளும் 1 ம் பிரதிவாதியும் கேட்டுகொண்டதற்கிணங்க சாட்சியம் அளிக்க

வந்துள்ளேன். சாட்சி பின்னிட்டு வாதிகள் அழைத்ததன் பேரில் வந்ததாக கூறினார். வாசாஆ 1 தயாரிக்கும் போது 1 ம் பிரதிவாதி என்னிடம் கொடுத்தாக சொல்லப்படும் அசல் ஆவணம் யார் எந்த தேதியில் ஏற்படுத்தி கொண்டார்கள் என்பதை சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியாது. வாசாஆ 1 எழுதி கையெழுத்து வாங்கும் போது அந்த ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள தொகை எதுவும் அன்றைய தேதியில் பரிவர்த்தனை ஆகவில்லை என்று சொன்னால் சரிதான். 1 ம் வாதி மற்றும் 2 மற்றும் 3 வாதிகள் முனியப்பனுக்கு ரூ.15 லட்சம் கொடுத்ததை நான் பார்க்கவில்லை. நான் சொன்ன தேதியில் ஆவணம் மட்டும் தான் எழுதப்பட்டது என்றும் சாட்சிகள் முன்னிலையில் பணபரிவர்த்தனை நடைபெறவில்லை என்றும் சொன்னால் சரிதான். வாசாஆ 1 அடமான பத்திரத்தின் சொத்து ஏற்கனவே 3 ம் பிரதிவாதி வசம் அடமானம் வைக்கப்பட்டு அசல் ஆவணம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. வில்லங்க சான்றிதழை பார்க்காமலேயே வாசாஆ 1 நானும் வாதிகளும் 1,2 பிரதிவாதிகளும் சேர்ந்து தயாரித்து கொண்டோம் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.